செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி மீ 28௳, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது௵ ஆடி மீ உஅ௳ வெள்ளிக்கிழமை (13-8-1971) [இலக்கம் கஅ

# குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

## நாளை கார்த்திகைத் திருநாள் திருவிழா

## நல்லூரான் வீதி வலம் வரும் காட்சி காண வாருங்கள்

உருவா யருவா
யுளதா யிலதாய்
மருவாய் மலராய்
மணியா
யொளியாய்க்
கருவா யுயிராய்க்
கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா
யருள்வாய் குகனே

பரம்பொருளாகிய இறைவன் தானே சுயம்பிரகாசமாய் ஒன்றிலும் தோய்வின்றி விளங்குகின்றான். அவ்வாறு விளங்கும்போது 'சுத்த சிவம்' என்று அழைப்பது சைவமரபு. சுட்டிக் காட்டி உணரப்படாத இறைவனைச் சுட்டிக் காட்டித் தோத்திரம்பாடியபெருமை சைவத்திற்கு உண்டு. உருவம், அருவம், ஊர் பேர், குணங்குறி யாவும் இன்றித் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு, மனோ வாக்குக் கெட்டாது மிளிரும் பரம் பொருள், உயிர்கள் தன்னிலையை அடையச் செய்யும் சக்தியைப் பின்னமிலாது கொண்டு விளங்குகின்றது. இறைவனின் பெருங் கருணையே சக்தியெனப் பேசப்படுகின்றது.

இச் சக்தியுடன் விளங்கும்போதே உயிர்கள் அவன் கருணைத் திறத்தை உணரக்கூடியதாக இருக்கின்றன. உயிர்கள் மலம் நீங்கிச் சுத்த இன்பானுவத்தில்திளைப்பதற்காகவே அலகிலா விளையாட்டுடையவனாக விளங்குகின்றான் இறைவன். அத்தகைய திருவிளையாடல்களில் ஒன்றே அறுமுகன் அடியார்களுக்கு அருள் புரியும் திருக்கோலம்.

சிவம் சக்தி நாதம் விந்து எனும் அருவத் திருமேனியும் மகேசுரன், உருத்திரன் மால் அயன் எனும் உருவத் திருமேனியும் சதாசிவன் எனும் அருவுருவத் திருமேனியும் கொண்டு விளங்குவது இறைவனின் தடத்தலட்சணம். இத் தடத்தத் திருமேனிகளைக் கொண்டு இறைவன் உயிர்களுக்கு அருள் புரிகின்றான். இத் திருமேனிகளை "ஏக நாதனே நடிப்பன்" என்கின்றது சிவஞான சித்தியார். இவ்வாறு அருவமாகவும், உருவமாகவும், அநாதியாகவும், பலவாயும், ஒன்றாயும், பிரமம் எனப்படும் ஒரு பொருளாகவும் சோதி வடிவாகவும் விளங்கிகின்ற பரம் பொருள் உலகம் உய்கதி அடையும்வண்ணம் கருணை பொழியும் ஆறு வதனங்களும் பன்னிரு கண்களும் கைகளும் கொண்டு உதித்தனன் என்று கூறுகின்றது கந்தப் புராணம்.

அருவமும் உருவுமாகி
அநாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்
குதித்தனன் உலகமுய்ய.

முருகப் பெருமானுக்கும் பரம்பொருளுக்கும் வேறுபாடு இல்லை வேறுபாடு கொண்டு சிந்திப்பது விபரீத உணர்வையேற்படுத்தும். கந்தன் கருணைப் பிரவாகம் அளவிடற்கரியது. கலியுக வரதன் முருகன். ஒருதரம் 'முருகா' என ஓதும் அடியவர் தம் இடர்தீரச்செய்வது அவன் கைவேல், செவ்வேள்— திருக்கை வேல் ஞானவடிவேல். உயிர்க்கு அறியாமையை நீக்கி அறிவைக் கொடுப்பவன் அவ்வழகிய ஞானபண்டிதன். தந்தைக்குத் தனிஞான உபதேசம் புரிந்த தனையன் அப்பெருமான். அதனால் தகப்பன் சுவாமி எனவும்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)



நல்லூர் முருகன்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தின்

## 5-ஆம் ஆண்டு நிறைவு

## விழாவும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பீடாரோகண ஐந்தாவதாண்டுப் பூர்த்தி விழாவும் நாளை சிறப்புற நிகழும்

ஈழத்தில் முதலாவது தனிப்பெரும் சைவ ஆதீனம் தாபிக்கப்பெற்றும் அதன் தனிப்பெரும் பீடாதிபதியாக மந்திர காஷாயம் பெற்று துறவுபூண்டும் ஐந்தாண்டு பூர்த்தியடைவதை முன்னிட்டு ஆதீனத்தில் பெரு விழாவாக நாளை சனிக்கிழமை (14-8-71) சைவப்பெரு மக்களால் சிறப்பாகக் கொண்டாடத் திருவருள் கூட்டியுள்ளது.

உதயம் 6-00 மணி ஆத்மார்த்தமூர்த்திக்கு அபிஷேகம் பூஜை 5-30 மணி விஸ்வரூப தர்சனம் 6-30 மணி ஸ்ரீ சண்முகப்பெருமானுக்கு அபிடேகம், 10 மணி ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளுக்கு பீடாபிடேகம் நண்பகல் 11 மணி விசேடபூசை உற்சவம் 12 மணி ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் கொலுக் காட்சி. வாழ்த்துரை: சிவஸ்ரீ வை. குமாரஸ்வாமிகுருக்கள், சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள், சிவஸ்ரீ சி. பரமேஸ்வரக் குருக்கள் ஆகியோர். குருஸ்துதி: ஆதீன கௌரசைவ சித்தாந்த விரிவுரையாளர் வித்துவான் திரு. க. கணபதிப் பிள்ளை B. A. செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் 12-30 மணி அடியார்கள் பாதகாணிக்கைசெய்தல். 1 மணி மாகேசுரபூசை பிற்பகல் 3 மணி மங்களவாத்தியக் கச்சேரி 4-30 மணி பூசை, பட்டணப் பிரவேசம் (நல்லைக் கந்தன்வீதி) 6 மணி கார்த்திகை உற்சவம் 6-30 மணி பட்டமளிப்பு விழா வைபவம், மில்க்வைற் சோப் ஸ்தாபன அதிபர் 'சிவநெறிப் புரவலர்' திரு. க. கனகராசா தம்பதிகள் உபயமாக அன்னதானம் நிகழும் (க.சி)

## கடவுள் வழிபாட்டுக்கு உகந்த உடைகளையணிக.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் தினமும் திருவிளையாடற் புராணப் பிரசங்கம் நடத்துகின்ற நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மக்களை சைவாசாரத்துடன் மேலைநாட்டு உடைகளையணிந்து கொள்ளாது தமிழ் நாகரீகத்துக்கும், சைவாசாரத்துக்கும் உகந்த உடைகளை அணிந்து கொள்ளும்படியும், மேல்நாட்டுப் பெண்பிள்ளைகள் எங்கள் நாகரிகத்தைப் பின்பற்றி சேலையுடுத்து அழகாகவரும் காலத்தில் எங்கள் நாட்டுப் பெண் பிள்ளைகள் மேலை நாட்டு உடைகளை அணிவது வருந்தத்தக்கதெனவும், காவற்படையினர் காலில் சப்பாத்து அணியாது கோவில் வீதியில் நடமாடுகின்ற காலத்தில் மற்றையவர் சிலர் சப்பாத்துச் செருப்பு அணிந்து கொண்டு வருவதும் விரும்பத்தகாத செயலெனவும் குறிப்பிட்டனர்.

### பஜனை

வண்ணை, இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இரதோற்சவத்தை முன்னிட்டு வண்மேற்கு அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து பஜனையொன்றை நடாத்தவிருக்கின்றனர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

## நூல் நிலையத் திறப்பு விழா

நல்லூர் நாவலர் நிலையத்தில் நிறுவப்பெறும் நூல் நிலையத் திறப்பு விழா 12-8-71 வியாழக்கிழமை மாலை 5மணிக்கு சபைத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நிறைவெய்தியது.

திரு. ச. அம்பிகைபாகன் வரவேற்புரை கூறினார்கள். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்கினார்கள். நல்லைவர் "நாவலர் இலட்சியங்கள்" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். நூல் நிலையம் கீழ்க்காணும் பிரிவுகளாக இயங்கும்.

1. நாவலர் பெருமானால் இயற்றப்பெற்ற முதல் பதிப்பாக வெளிவந்த நூல்கள்.
2. நாவலர் பெருமானைப் பற்றி ஏனையோர் இயற்றிய நூல்கள்.
3. சைவசித்தாந்த நூல்கள், ஆகமங்கள், திருமுறைகள், புராணங்கள்.
4. இலக்கிய நூல்கள்,
5. இலக்கண நூல்கள்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## எங்கள் அறிவித்தல்

நல்லைக் கந்தன் கோயில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, இந்துசாதனக் காரியாலயம் என்பவற்றில் கருமமாற்றுவோருக்கு எதிர் வரும் 19-8-71 விடுமுறைநாளாகும் என்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞூ ஆடி மீ உஅ-உ வெள்ளிக்கிழமை [1971]

## சிவாலய தரிசனம்

இக்காலம் சிவாலய தரிசனஞ் செய்யப்போகின்றவர்கள் ஆலயங்களுக்கு ஆசாரமில்லாமற் போகின்றார்களெனவும் சட்டை யணிந்து கொள்கின்றார்களெனவும், வீதியில் பாதரட்சை யணிந்து கொள்கின்றார்களெனவும் பெரியார்கள் பிரசங்கங்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் மூலமும் தங்கள் கண்டனங்களை வெளியிட்டுள்ளார்கள். இவ்விதமான குற்றங்களை மக்கள் புரிதல் பெருஞ் சிவநிந்தனையாகும். ஒரு நீதவான் வழக்குகளை விளங்க நீதிமன்றத்தையடையும்பொழுது யாவரும் அமைதியாக எழுந்து மரியாதைசெய்கின்றனர். பொருத்தமில்லாத உடைகளை மக்கள் அணிந்து செல்லுதல் தடுக்கப்பட்டிருக்கின்றது. நீதிமன்றத்தில் யாவரும் அமைதியாக விருத்தல்வேண்டும். வழக்குகளை விசாரணை புரியும் நீதிபதிக்கு மக்கள் அளிக்கும் மரியாதைகளைப் பார்க்கிலும் எத்தனை மடங்கு விசேடமான மரியாதைகளை மன்னர், நீதியரசர், அமைச்சர் முதலிய யாவருக்கும் மேலான கடவுளுக்கு மக்கள் செலுத்துதல் வேண்டும். கோயிலானது இறைவன் அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்ய எழுந்தருளியிருக்கும் தானமாகும். கோயிலை ஒருவன் அணமித்தவுடன் அது எல்லா உயிர்களுக்கும் தலைவராகிய இறைவன் எழுந்தருளியிருக்கு மிடமென்ற எண்ணம் அவன் உள்ளத்தில் உதித்தல்வேண்டும் கோயிற்றிருவிழாக்களில் இறைவன் உயிர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் பொருட்டு உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி வருகின்றாரென அவன் மதித்தல் வேண்டும். பக்தியுடன் இறைவன் திருநாமங்களையும் தோத்திரங்களையும் ஓதி வழிபடுதல் வேண்டும்: அஞ்சலி செய்தல் வேண்டும். இவ்வித வழிபாட்டினால் அவனுடைய மனம் இறைவன் திருவடிகளில் லயப்படுகின்றது, மன ஒடுக்கம் இறைவன் திருவருளைப் பெற வழி வகுக்கும்.

மேலே காட்டிய குற்றங்களை ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் மக்கள் புரியாது கோயிலின் புனிதத் தன்மையைக் காப்பாற்றுவார்களாக. அங்ஙனம் அவர்கள் செய்யத் தவறுதல் குளிக்கப் போய்ச் சேறு பூசுவதை நிகர்க்கும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுடைய "இரண்டாம் சைவவினவிடையிலுள்ள சிவாலய தரிசனவியல் என்ற பகுதியை மக்கள் கற்றுணர்வார்களாக. அதில் இக் கட்டுரைக்குப் பொருத்தமான சிலவற்றைக்கீழே தருகின்றோம்.

### திருக்கோயிலுக்கு எப்படிப் போதல்வேண்டும் ?

ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துச் சந்தியாவந்தனம் முதலியன முடித்துக் கொண்டு; தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம் முதலியன வைக்கப் பட்ட பாத்திரத்தை தாமே எடுத்துக்கொண்டேனும், பிறரால் எடுப்பித்துக் கொண்டேனும் வாகனுதிகளின்றி நடந்துபோதல் வேண்டும்.

### திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள் யாவை?

ஆசாரமில்லாது போதல், கால்கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், பாக்கு வெற்றிலையுண்டல், போசனபானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடித்தல், சூதாடல். சிரசிலே வஸ்திரந் தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரக்ஷையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவசத்தம்பம், பலிபீடம், இடப விக்கிரகம் என்னுமிவைகளின் நிழலை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் ஒரு தரம், இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம், இருதரம் வலம்வருதல், ஓடி வலம்வருதல், சுவாமிக்கும், பலிபீடத்துக்குமிடையே நமஸ்கரித்தல், அகாலத்தில் தரிசிக்கப் போதல், திரையிட்டபின் வணங்குதல், அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்திலும் பிற்பக்கத்திலும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டு தாண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபொழுது வணங்குதல், உற்சவங்கொண்டெழும் பொழுது அங்கேயன்றி உள்ளேபோய் வணங்குதல் முதலியனவாம். இக்குற்றங்களுள் ஒன்றையறியாது செய்தவர் அகோரமந்திரத்தில் ஆயிரம் உருச்செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக் குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

---

உ

## தவாநந்தங் காண்டல் தவம்

**முருகன் அருள் பெருகும் மூதூராம் நல்லை தருமெய்த் தருமாதீனத்துக் —குருமன் சுவாமிநாதத் தம்பிரான் தூய சுவாமி தவாநந்தங் காண்டல் தவம்.**

ஞானத்தின் திருவுருவாக விளங்கிய திருஞானசம்பந்தப் பெருமான் பெயரால் விளங்கும் நல்லை ஆதீனம் சென்ற ஐந்தாண்டுகளாக நாட்டில் ஒரு ஞானபீடமாக விளங்குகின்றது. அதன் பணி முருகன் அருளால் வளர்ந்தோங்குக.

---

## குருவாய் வருவாய்

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

சுவாமிநாதன் எனவும் பெயர் பெற்றான்.

"தம்முதல் குருவுமாய்" உணர்த்த உணர்வன உயிர்கள். அகத்து று நோயைஉள்ளினர் அன்றி சகத்தவர் அறியார். அது போல் நமக்குள்ள மூல நோயினைத் தீர்க்கும் முதல்வன் அம் முருகப் பெருமானே. அப் பெருமான் அருள் கொண்டு மதலையாய் ஆடல் புரிகின்றான். அவ்வாடல் கண்டு அக நெக உள்ளுருகும் அடியார்கள் அவன் அடி சேர்வர். அவர்களுக்கு அம் முதற் பொருள் குருவாய் உணர்த்துகின்றான். குருவாய் வந்து அருள் புரிகின்றான்.

குருவாய் வந்து அருள் செய்யும் குகன் பாலனாய்த் தோன்றிச் சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் வளர்த்தெடுக்கப்பட்டான் என்று கூறுகின்றது கந்தபுராணம். "திருவுருவாய் முன்னர் அறுமீன் முலையுண்ட மூது விளையாடி நறுநீர் முடிக்கணிந்த நாதன்" என்று அழைக்கின்றார் குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில்.

கார்த்திகைப் பெண்களால் போற்றி வளர்த்தெடுக்கப்பட்ட கார்த்திகேயன் பெருநாள். கார்த்திகைத் திருநாள் இத் திருநாள் அன்று அடியார் துயர்தீர்க்க, அஞ்ஞான இருள் நீக்கி மெஞ்ஞான ஒளிதரக் கவின் பெறு அழகுடன் கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு வணங்கக் காட்சி அளிப்பான் நல்லூர்க் கந்தன்.

நல்லூரான் வீதிவலம் வரும் மாட்சி கண்ணுற கண்டார்க்கன்றி மற்றோர்க்குப் புலப்படாது. அக் கந்தன் பவனிவரும் காட்சிகாணும் வாய்ப்பினைப் பெற்ற கண்கள் மற்றினிக் காண்பதென்னே. காணுதார் கண் என்ன கண்ணே? கண் படைத்தார் யாவரும் காணவாருங்கள்! நம் வல்வினை தீர்த்து நமையாளும் நல்லூரான் கார்த்திகைத் திருநாள் கவின்பெறு காட்சியைக் காண வாருங்கள்! கண்டு பேராவின்பப் பெருவாழ்வடையுங்கள்.

சைவப் புலவர்:
மு. திருஞானசம்பந்தபிள்ளை

---

சைவப் பெரியார்களின்

## ஆசிபெற்ற பெரியார்

[ திரு. வை. இரகுநாதமுதலியார் M. Sc.
பதில் காரியதரிசி, சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்]

சைவ பரிபாலன சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு வே. நாகலிங்கம் J. P, U. M. அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் சைவநூற் றெளிவும், தெய்வ பக்தியும், வித்துவத் தன்மையும், திறமையும் ஒருங் கமையப்பெற்ற பெரியார், இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். கொள்கைப்படி நடப்பவர். தனது கொள்கைகளை மற்றவர்களுக்காக மாற்றாத வீரன்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயிலுங் காலத்தில் தமது கல்விச் சிறப்பினால் திருமதி பிறவுண் என்பவரது அபிமானத்துக் குள்ளானார், திருமதி பிறவுண் அவர்களின் ஊக்கம் காரணமாக இவரிடத்தில் சமய அபிமானம் சுடர்விடத் தொடங்கியது. சமயங்களைக் கற்கத் தொடங்கினார். இவரிடம் சமயப்பொதுநோக்கு காணப்பட்டது பிற சமயங்களை ஒருபோதும் இழிவுசெய்வது கிடையாது.

பின்னர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் காலத்தில் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவலர் சுவாமிகளுடைய தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பே சைவ சமயத்தின் உண்மைகளை அறிவதில் அவருக்கு ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். சைவ சமயத்தை அன்றிலிருந்து முறையாகக் கற்கத் தொடங்கினார்.

அடுத்து விக்டோரியாக் கல்லூரியில் படிப்பிக்கும் காலத்தில் சைவக் காவலனாகத் துலங்கிய திரு. சிவபாதசுந்தரம் அவர்களுடைய நட்பும் துணையும் கிடைத்தது. அவருடைய சைவ சமய அறிவுப் பசிக்கு ஏற்ற உணவை திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் வாரி வழங்கினார்கள்.

இக்காலத்தில் தான் திரு. ஸேர். பொன். இராமநாதன் அவர்கள் தமது இராமநாதன் கல்லூரியில் சனிக்கிழமைகள் தோறும் சமய வகுப்புகளை நடத்தினார், நமது தலைவர் அவர்கள் ஒவ்வொரு வகுப்பிற்கும் தவறாது செல்வார். அவரது சமயத் தாகத்திற்கு இவ் வகுப்புகள் தண்ணீர் ஊற்றியது போல் அமைந்தன. சமயப் பொது நோக்கையும் இவ் வகுப்புகளில் அறிந்து கொண்டார்.

சுவாமி வேதாசலம் என அழைக்கப்படும் மறைமலை அடிகள் அவர்களுடைய தொடர்பும் இவருக்கு ஏற்பட்டது. இவருடைய அழைப்பின் பேரில் மறைமலையடிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தார். மறைமலையடிகள் மீது இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு அவருடைய சீடரில் இவரும் ஒருவர் எனலாம்.

இவரிடம் ஒரு துறவிவந்து ஒரு பொருளைக் கொடுத்ததாகவும், இவர் அவரை தம் வீட்டிற்கு வரும்படி அழைத்ததாகவும் அவர் தம் வேலை முடிந்து விட்டது என்று சொல்லி மறைந்துவிட்டதாகவும் அறிகின்றேன். அத்துணை பெருமை வாய்ந்தவர் திரு. வே நாகலிங்கம் அவர்கள்.

மேலும், திருவிளங்கம் அவர்கள் சிவஞானசித்தியாருக்கு உரை எழுதும்போது இவரும் கூட இருந்தார் என்பர். இது இவருடைய புலமையை இனிது எடுத்துக் காண்பிக்கின்றது.

இவர் தமது 30-ஆவது வயதில் வழக்கறிஞரானார் சுமார் 48 ஆண்டுகள் வழக்கறிஞராகக் கடமையாற்றியுள்ளார். தமது தொழிலைத் திறம்பட நடத்தி பலரது பாராட்டுகளைப் பெற்றார்.

இவ்வாறான பெருமைகளையுடைய பெரியாரைக் கௌரவிக்குமுகமாகவே சென்னை சைவ சித்தாந்த சமாஜம் தாங்கள் நடாத்தும் சைவ சித்தாந்த மகாநாட்டிற்கு இவரைத் தலைமை தாங்க அழைத்தது. இவருடைய புலமை ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் பல அறிஞர்களால் பாராட்டப்பட்டது. அதன் பேறுவாகவே சித்தாந்த வித்தகர் என்ற புல

வளர்ச்சி 3-ஆம் பக்கம்

# அநுதாபத் தீர்மானம்

சைவபரிபாலன சபையின் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு 6-8-'71ல் திரு. முதலியார் செ. முத்துத்தம்பிஅவர்கள் தலைமையில் நடைபெற்ற சைவபரிபாலன சபையின் நிருவாகசபைக் கூட்டத்தில் நிறைவேறிய அநுதாபத் தீர்மானம்.

சித்தாந்த வித்தகர், திரு வே. நாகலிங்கம் அவர்கள் ஓர் சிறந்த அறிவாளி. எப்பொழுதும் படித்துக்கொண்டே இருப்பார். இவரது புகழ்மணம் இலங்கையில்மட்டுமன்றி இந்தியாவிலும் வீசியது. இதுவரை சுமார் மூன்று நான்கு இலங்கையர்கள்தான் சென்னை சைவசித்தாந்த சமாஜம் வருடாவருடம் நடாத்தும் சைவ மகாநாட்டிற்குத் தலைமைதாங்கியுள்ளார்கள். திருவாளர்கள் சேர் பொன். இராமநாதன். சேர் கந்தையா வைத்தியநாதன் ஆகியோர் ஆவர். அவர்கள் வரிசையில் எங்கள் சித்தாந்த வித்தகரும் இடம்பெறுகின்றார். அங்குதான் அவருக்கு சித்தாந்த வித்தகர் என்ற புலமைப் பட்டமும் கிடைத்தது. இவரிடம அநேகர் பாடங்கேட்டுள்ளார்கள்; சைவபரிபாலன சபை இவரது ஆற்றலைப் பயன்படுத்தத் தவறிவிட்டது. நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவசித்தாந்த வகுப்புகளை அன்னாரைக்கொண்டு வைக்காதது பெருங் குறை. இவரது பிரிவு சைவ உலகிற்கு ஒரு பெரும் இழப்பாகும். திரு முத்துச்சாமிப் பிள்ளை அவர்கட்குப் பிற்பாடு சபையை முறையாக நடத்திய பெருமை இவருக்குண்டு. இவர் நல்லவர். நல்ல வாழ்வு வாழ்ந்து காட்டிப் போய்விட்டார். ஒரு நல்ல சைவசித்தாந்தியாக இருந்திருக்கின்றார். சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்) திருவிளங்கம் ஆகியோரிடம் பயின்றுள்ளார். நோய் இல்லை. தமது 77-வது வயதில் இறைவனிடம் சென்றுவிட்டார். அன்னாரது மறைவு சைவபரிபாலன சபைக்குப் பெரும் நட்டமாகும்.

மேற்படி அநுதாபத் தீர்மானத்தை திரு முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் எடுத்துரைத்தார்கள். திருவாளர்கள் இ பொ. இராசையா, அப்புக்காத்து த. சோமசுந்தரம், இ செ. மன்மதராயன், வழக்கறிஞர் ச. செல்வராசா ஆகியோரும், இவ் அனுதாபத் தீர்மானத்தை ஆதரித்து பாராட்டுரை வழங்கினார்கள். இருநிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சைவப்பெரியார்கள்

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

மைப் பரிசிலும் இவருக்குக் கிடைத்தது.

இப்படியான புலமையையும், அடக்கப் பண்பையும் தன்னகத்தே கொண்ட சைவப் பெரியாரை தலைவராகப் பெற்ற பெருமை சைவபரிபாலன சபைக்கே சாரும். நீண்ட நாட்கள் தலைவராகப் பணி புரிவார் என எண்ணியிருந்த எண்ணம் பொய்த்து விட்டது. இவ்வுலக வாழ்க்கைபோதும் என்ற நினைப்பில் சடுதியில் எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு தமது 78வது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். அன்னாருடைய பிரிவு சைவத்துக்கு மற்றுமோர் பேரிழப்பாகும்.

சைவபரிபாலன சபையின் செயலாளர் திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்களுடைய பிரிவைத் தாங்கமாட்டாது சபை துயருறும் இவ்வேளையில் அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாகச் சபையின் தலைவருடைய பிரிவும் சபையை வருத்துகின்றது. இது இறைவனுடைய திருவிளையாடலாகும்.

அன்னாருடைய பிரிவால் வாடும், துயருறும் அவருடைய குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் சைவ பரிபாலன சபை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

## மண்டலாபிடேகம்

யாம். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேசுவரியம்பாள் (பேச்சியம்பாள்) ஆலய நவோத்தர சகஸ்ர சங்காபிஷேக மண்டலாபிடேகம் இன்று (13-8-71) நண்பகல் சிறப்புற நிகழவிருக்கிறது இரவு திருவீதியில் தேவி திருவூஞ்சற்பாக்களை "வயிசை வாரத" யாழ். ந. வீரமணி ஐயர் அவர்கள் பாடுவார்கள். செல்வி. பவானி சதாசிவம்அவர்களின் சங்கீதக்கச்சேரியும், பஜனை. மங்கள இசை ஆதிய நிகழ்ச்சிகளையடுத்து தேவி திருப்பூந் தண்டிகையில் திருவீதி உலா வருதல் நிகழும்.

## "மிருதங்க மணி"

தாவடி சைவ இளைஞர் மன்ற முன்றலில் இன்று பிரபல மிருதங்கவித்துவான் திரு. எஸ். என். செல்லத்துரைக்கு ' மிருதங்க மணி' என்னும் பட்டம் வழங்கப்படவுள்ளது இவ் வைபவத்தில் அளவையூர் - "அருட்கவி" சி. விநாசித்தம்பி, முன்னாள் மாவட்டநீதிபதி திரு. சி. தம்பித்துரை அவர்களும் பிறரும் பாராட்டுரை வழங்குவர்

## வானொலி அஞ்சல்

நல்லூர்த் தேர் தீர்த்தத் திருவிழா நிகழ்ச்சிகளை வழமைபோல அஞ்சல்செய்ய இலங்கைஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஒழுங்கு செய்துள்ளது,

## சைவநெறித் தொண்டர் கழகம்

நமது நாட்டில் நமது பிற்சந்ததியார் சைவ உணர்வும் நற்பண்பும் ஒழுக்கும் ஒற்றுமையும் உள்ளவர்களாய் வாழ வழிக்கும் நோக்கத்துடன் சைவ நெறித் தொண்டர் கழகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவர் சித்தாந்தப் புலவர், வித்துவான் க. ந. வேலன், செயலாளர் திரு. க. மகேசன் B. A, (6. இராணி வீதி, யாழ்ப்பாணம்.) அன்பர்கள் இக்கழகத்தில் உறுப்பினராகச்சேர்ந்து சைவசமய வளர்ச்சிக்கு உழைப்பதை விரும்புகின்றார்கள்.

## பஜனைப் பாத யாத்திரை

வழமைபோல நல்லூர் தேர்த் திருவிழாவை யொட்டி அடியார்கள் பஜனைப்பாத யாத்திரையொன்றை 18ம் தேதி காலை நயினை நாகபூஷணியம்பாள் கோவிலிருந்து ஆரம்பிப்பார்கள்: புங்குடுதீவு, வேலணை, வண்ணார்பண்ணை மார்க்கமாக நல்லூரை வந்து சேரும்.


## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

இல: 10660

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

புலோலி மேற்கு, கணபதிப்பிள்ளை விஞசித்தம்பி கைம்பெண் பத்தினிப்பிள்ளை —வழக்காளி

எதிராக

புலோலி மேற்கு, வேதவனம் பரமசிவம் —எதிராளி

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோவிற்பற்று

மேற் சொல்லிய இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படு மாதனங்கள் 1971-ம் ஆண்டு ஆவணி மீ 28-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1. புலோலி மேற்கு மழவராய குறிச்சியிறை தெணிவங்க வத்தை நிலப்பரப்பு 4, 7/8 லாகன் வடலிகள் இளந்தைகளும் எல்லை கிழக்கு பாலசுப்பிரமணியம பெண் செல்லம்மாவுக்குடையவாதனம். வடக்கு சிதம்பரப்பிள்ளை சோமசுந்தரத்துக்கும் மனுபேருக்குமுடைய வாதனம் மேற்கு கணபதிப்பிள்ளை தியாகு பெண் குழந்தைநாச்சிக்கும் மனுபேருக்குமுடையவாதனம், தெற்கு தெரு இவ் வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் மூன்றிலொருபங்கும்.

ஆதன விபரம்

2. ஷை விறை நெடுங்குள வெளித்தெணிக்காடு கடலப்பாய நிலப்பரப்பு 9 ஷை நிலப்பரப்பு 28 இப்பிரிவுகளில் சவக்காலைக் கெடுபட்ட நிலப்பரப்பு 10 நீக்கி மிகுதிக்கு நிலப்பரப்பு 27 லாகன் தென்னைகள் கிணறும். எல்லை கிழக்கு விசுவநாதர் கனகரத்தினத்தின் உரிமைக்காருக்கும் மனுபேருக்குமுடைய வாதனம். வடக்கு சவக்காலை மேற்கு குட்டியர் மூத்ததம்பிக்கும் மனுபேருக்குமுடைய வாதனம். தெற்கு முருகப்பர் வேலப்பரின் உரிமைக்காருக்குடைய வாதனமும், மூத்தார் வள்ளியப்பரின் உரிமைக்காருக்குடைய வாதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் நிலத்தில் பத்திலொரு பங்கில் அரைவாசியும் இரண்டு பனைகளில் அரைவாசியும் மூன்று தென்னைகளில் அரைவாசியும் நடுப்பெறவிருக்கும் கிணற்றில் 1/3 பங்கில் அரைவாசியும்.

| | | |
|---|---|---|
| துரட்சித்தோகை: | ரூபா 660 | 00 |
| ரூபா 500/-க்கு 6-10-69 தோடக்கம் 17-4-70 வரை 10 வீதவட்டி | 25 | 00 |
| ரூபா 685/-க்கு 17-4-70 தோட்க்கம் 10-6-71 வரை 5 வீத வட்டி | 39 | 00 |
| மொத்தம் ரூ | 724 | 00 |
| செலவு ரூ. | 156 | 59 |
| மொத்தம் ரூ. | 880 | 59 |

V. M கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
24-7-71 எம். 192 13-8-71



## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 11520

1. கந்தையா வயித்திலிங்கமும்
2. பெண் சிவசிதம்பரமும், அளவெட்டி —வழக்காளிகள்

எதிராக

சிவலிங்கம் கைம்பெண் நாகேஸ்வரி, காலஞ்சென்ற வயித்திலிங்கம் விசுவலிங்கத்தின் ஆதனத்தின் சட்டபூர்வமான பிரதிநிதியாக, அளவெட்டி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11520-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக்காணிகளை 1971ம் ஆ புரட்டாதி மீ 14 உ (14-9-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 7666-00ம், 22-3-70 தொடக்கம் 20-1-71 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 600-91

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "மனுக்கைத் தெற்கும் தாளைமடையும் தாளமிமடையும்" தெ. பர. 10¾ எல்லை கிழக்கு செல்லையா நடராசாவுக்கும் இளையதம்பி பெண் ஆச்சிக்குட்டிக்குமுரிய ஆதனங்கள், வடக்கு இளையதம்பி பெண் ஆச்சிக்குட்டிக்கும் கந்தையா பெண் சரஸ்வதிக்குமுரிய ஆதனங்கள், மேற்கும் தம்பு சின்னத்தம்பிக்கும் கதிரவேலு விஞசித்தம்பிக்குமுரிய ஆதனங்கள், தெற்கு சரவணமுத்து செல்லையாவுக்கும் மனுபேருக்குமுரிய ஆதனம். இடங்களும்.

2. ஷை "சமசாலை" நி. பர. 35¾ மேற்கெல்லைக் சுவரின் அரைவாசியும் எல்லை கிழக்கு நல்லதம்பி செல்லவிநாயகமூர்த்திக்கும் தவசிப்பிள்ளை செல்லையாவுக்கும் வெற்றிவேலு கைம்பெண் செல்லாச்சிக்குரிய ஆதனங்கள், வடக்கு வெற்றிவேலு கைம்பெண் செல்லாச்சிக்குமுரிய ஆதனம். மேற்கு குலசிங்கம் பெண் ராசசக்திக்குரிய ஆதனம், தெற்கு முருகேசு பொன்னம்பலத்துக்கும் பங்காளருக்கும் நல்லதம்பி செல்லவிநாயகமூர்த்திக்குமுரிய காணி. இடங்கலிற சொரியலாய் 2/9 பங்கும்.

3. ஷை "வடக்குவியவத்தை" நி பர 10 எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு பொன்னையா விஜயரத்தினசிதுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு முருகர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் சரவணமுத்து செல்லையாவுக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளைக்கும் மனுபேருக்குமுரிய காணி இடங்கலிற் சொரியலாய் அரைவாசி

4. ஷை "தடுகப்பை" நி. பர. 16 வடலிகளும் எல்லை கிழக்கு வயிரமுத்து ராஜதுங்கம் பெண் தையல்நாயகிக்கும் பங்காளருக்குமுரிய காணி வடக்கும், மேற்கும் ஒழுங்கை. தெற்கு ஐயம்பிள்ளை இளையதம்பிக்கும் பங்காளருக்குமுரிய காணி இதில் சொரியலாய் அரைவாசி.

22. கோவில் வீதி
யாழ்ப்பாணம்,

நீ. அன்னாபிப்பிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 116 23—7—71


## தர்மகர்த்தா சபை

சங்குவேலி தெற்கிலிருக்கும் ஆமாத்தைவளவு ஞான வயிரவ, காளிகோவில் தர்மகர்த்தா சபையின் நிர்வாகக் கூட்டம் 8—8—1971 ஞாயிற்றுக்கிழமையன்று திரு. கா. கந்தசாமி (O. A) அவர்களின் தலைமையில் மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

1. மேற்படி கோவில்களை பொது ஸ்தாபனமாக்க வேண்டுமென ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2. இக்கோயில்கள் இருக்கும் காணியின் கிரயத்தை கிலச் சொந்தக்காரருக்கு சேர்ப்பதற்கு பொது நிதி திரட்டுவதென்னும் தீர்மானம் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.


### இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

| உள்நாடு | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| **வெளிநாடு** | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |



## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. வேம்பையா ஆறுமுகமும்
2. மனைவி இராசம்மா இருவரும்

36/1, யாழ் வீதி, யாம்ப்பாணம்.

வழ: இல, M. B. 10353 — வழக்காளி

எதிராக

1. கன்னி கதிரவேலும் 2. மனைவி தெய்வானையும்
3. நாகமுத்து சின்னத்துரை எல்லோரும், தெல்லிப்பளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10353-ம் இலகக் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி- பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஆ புரட்டாதி மீ 14-ம் உ (14-9-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 5480/-ம் 7-10-68 தொடக்கம் 26-1-70 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 467-05 இதில் ரூபாய் 2000/-மும் கோட்டுச்செலவால் ரூபா 150/- கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பிரிவு வண்ணார்பண்ணை தென்கிழக்கு கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை "மாணிக்கன்காடு" நிலப்பரப்பு (2) இரண்டு இதில் வீடும் கிணறும் வான்பயிர், செய்பயிர் உள. கிழக்கு இராமநாதன் சிவராசாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கையொழுங்கையும், கதிர்காமர் வயித்திலிங்கத்தின் ஆதனம், தெற்கு காலஞ்சென்ற கந்தப்புவின் உரிமையாளர்களின் ஆதனம்.

பதிவு இலக்கம்: D 189/231

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
அராலி வடக்கு
வட்டுக்கோட்டை, 3-8-71
எம். 190 13-8-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம்: M B 3794

மீசாலை தெற்கு. கார்த்திகேசு கந்தையா —வழக்காளி

எதிராக

1 பொன்னம்பலம் மகன் விஜயராசன் (பராயமற்றவர்)
2 மீசாலை வடக்கு, பொன்னம்பலம் கைம்பெண் சரஸ்வதி (2ம் எதிரி தனது கணவன் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் ஆஸ்திகளின் பிரதிஸ்தராகவும் 1ம் எதிரியின் பராபரிப்புக்காரியாகவும், —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் M B 3794-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைக்த கோட்டுக் கட்டளைப் பிரகாரம் கீழ்க்காணும் ஆதனவி பரப்பில் விபரிக்கப்படும் ஆதன . 1971-ம் ஆண்டு ஐப்பசி ம தி 4 திகதி 4 '0 7') சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 950/-ம், 5—3—69 தொடக்கம் 13—9—70 வரையும் ரூபா 950/-க்கு 12% வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரையும் 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 351-42½

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணக் டிஸ்திறிக் தனங்காய் கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று பெரியபரந்தனிறை ஆரியன் வயல் நெ. பர. 110 இதில் தெற்குப் பக்கமாக நெ பர. 55 இதில் ரோட்டுக்கு எடுபட்ட நிலம் நீக்கி மிகுதி நெ. பர 53 (ஐம்பத்து மூன்று)க்கும் எல்லை கிழக்கு நீர்ப்பார்ச்சும் வாய்க்கால், வடகுரோட்டு மேற்கு சின்னையா பெண் செல்லாச்சிக்குரிய ஆதனம், தெற்கு: சுப்பிரமணியம் நவரத்தினத்துக்குரிய ஆதனம், இதடங்கலும், பதிவு L. 2/207

தபாற் கந்தோர் ரோட்,
சாவகச்சேரி
18-8-71 (191 13-7)

மு. நா. மார்க்கண்டு
கொமிஷனர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 11226

1. இராசரத்தினம் அருளானந்தனும் மனைவி
2. தங்கேஸ்வரியும் இருவரும்,

82/41, ஸ்ரான்லி ரோட்டு, யாழ்ப்பாணம். —வழக்காளி

1. கந்தையா சபாநாதனும் மனைவி
2. விமலாதேவியும் இருவரும், மண்கொல்லை, காங்கேசன்துறை. —எதிராளிகள்

யாழ்ப்பாணக் டிஸ்திறிக் கோட்டின் M B 11226-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு புரட்டாதி மீ 15-ம் திகதி (15-9-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3888-00ம், 2-11-69 தொடக்கம் 3—9—70 வரைக்கும் ரூபாய் 2800-00க்கும் 12% வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 378-65ம் இதில் 15-1-71ல் கொடுத்த ரூபாய் 150/- கழித்து அறவிடப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை 'மண்கொல்லை' நிலப்பரப்பு 8¾யும், கல் வீடும், பயிர்களும், இதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு வீரகத்தி கைம்பெண் அன்னத்தின் ஆதனமும், கையொழுங்கையும். வடகு ரோட்டு. மேற்கு வைரவர் கோவில் ஆதனமும், ஒழுங்கையும், தெற்கு கையொழுங்கை, தென்கிழக்கில் உள்ள கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்பு உரிததும் இதடங்கலில் சொரியலாய் ½ பங்கு

உரும்பிராய்
25-7-71

கா. தர்மலிங்கம்
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
எம். 188 13-8-71.

---

## Commission Sale

## கோட்டு கொமிஷன் விற்பனவு விளம்பரம

பருத்தித்துறை டிஸ்திறிக கோட்டில் வழ இல: 9653

1. கணபதிப்பிள்ளை இராசரெட்டிணமும்
2. பெண் நேசரெட்டிணம், அல்வாய் தெற்கு, —வழக்காளிகள்

எதிராக

1. செல்லமுத்து மகாலிங்கம், புலோலி கிழக்கு. —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1971-ஆம் ஆ. செப்டெம்பர் மீ 15-ம் திகதி (15—9—71) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணிக் கோவிற்பற்று தாவளை இயற்றாலை இறை தலவளையும் தலவளைக்காடும் ஏக்கர் 14 றூட் 3 பேட்சு 26, எல்லை கிழக்கு இராசையா இராமுவுக்குமுரிய ஆதனம், வடக்கும், மேற்கும், முடிக்குரிய ஆதனம், தெற்கு சிவப்பிரகாசம் நல்லமாப்பாணருக்குமுரிய ஆதனம், இது அடங்கலிலும் இதைச் சேர்ந்தவைகளனைத்தும். (மதிப்பிட்ட விலை ரூபா 11,930/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: ரூபா | 7120-83 |
| வட்டி ரூபா 5000/-க்கு 7 வீதப்படி 17-6-6 தொடக்கம் 27-3-69வரை (1வருஷம் 9மாதம்) | 612-50 |
| வட்டி ரூபா 7733-33க்கு 5 வீதப்படி 27—3—69 தொடக்கம் 23—3—70 வரை | 386-60 |
| கோடேபட்டது. | 8119-93 |
| | 1400-00 |
| | 6719-93 |
| வட்டி ரூபா 6719/-க்கு 5 வீதப்படி 19—6—71 தொடக்கம் விற்பனவு (15-9-71)வரை | 83-97 |
| மொத்த ரூபா | 6803-90 |

சிவலிங்கநிலையம்,
வி. மு. ரோட்,
பருத்தித்துறை
9-8-71.

க. நல்லலிங்கம்
கோட்டுக் கொமிஷனர்
ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்.
எம். 193 13—8—71

---

## புதுமையில் நாட்டம்



பக்தர் "நமது பெண் பிள்ளைகளுட் பலர் மேனாட்டு உடைகளை ["Miniskirt"] அணிந்து கொண்டு ஆலயத்துக்குச் செல்ல முன் வருகின்றார்கள்; ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் நமது பாரம்பரிய முறைகளைக் கைவிடலாமா? நம்மவர்கள் தமிழ்மரபிற்கேற்ப உடைகளை அணிவதே சிறப்புடைத்து என நல்லூர் திருவிழாப் பிரசங்கத்தின்போது ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அறிவுரை கூறியுள்ளாராமே!

சித்தர்: "கண்டிக்க வேண்டிய சமாச்சாரந்தான்? ஆடவரோ, மகளிரோ இன்று ஆலயத்துக்கு (ஒருசிலர் தவிர) வழிபாட்டுக்குச் செல்லுவோர் போலவா விளங்குகின்றார்கள்? ஆலயதரிசன விதிமுறையையும் - தமிழ் கலாசார முறைகளையும் கைக்கொள்வது எம்கடமையன்றோ!

"நாயன்மார் - நாதன்"

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு. இல: M B 5048

சண்டிருப்பாய் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி இராசரத்தினம் —வழக்காளி

எதிராக

சண்டிருப்பாய் கணபதி வேலுப்பிள்ளை —எதிராளி,

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டில் M B 5048-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1971-ஆம் ஹூ செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 22-ம் திகதி (22-9-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரத ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1240/-ம் இதில் ரூபா 1000/-க்கு 2-9-62 திகதி தொடக்கம் 17-6-63 திகதிவரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுமட்டும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 267-50 சதம். இதில் ரூபா 920/- இறுபட்டது.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று சண்டிருப்பாயிறை 'இணைதோட்டமும் மருபிரிவுகளும்' நிலப்பரப்பு 1, 3/4 ல) மேற்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும். எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு காத்தி சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு வீரேசு வயிரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் முற்பதிவு E 340/62.

2. மேற்படி சண்டிருப்பாய் இறை "அரசடி" நிலப்பரப்பு 2.7/8 ல பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசர் முத்துக்குமாரின் உருமைக்காரருக்குரிய ஆதனம். வடக்கு சுப்பன் பெண் சின்னக்குட்டிக்கும் சின்னத்தம்பி செல்லப்பாவுக்குமுரிய ஆதனம். மேற்கு செல்லப்பா சுப்பையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி செல்லப்பாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனமும் ஒழுங்கை முகப்பும். இதில் சொரியலாய் எழில் ஒரு பங்கு (1/7 ம்) அதற்குரியவைகளும். முற்பதிவு E 133/136.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 21-7-71
எம். 180 13-8-71.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 7916

கீரிமலை, தற்போது மலாயா

1. சுப்பிரமணியம் குமாரபதி 2. பெண் அம்பிகாதேவி இவர்களின் அற்றோனி தத்துவகாரி) கீரிமலை, செல்லையா கைம்பெண் இராசேஸ்வரிஅம்மாள்—வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம். கொழும்புத்துறை சென். மேரிதேவாலய ஒழுங்கை

1. நாகலிங்கம் சோமசுந்தரம் 2. பெண் புஸ்பராசமணி
3. செல்லப்பா கைம்பெண் அன்னபூரணம் (மரணம்) —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 7916-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆ. செப்டெம்பர் மீ (புரட்டாதி) 25-ந் உ (25-9-71) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 20240/-ம் இதில் ரூபாய் 12000/-க்கு 2-1-64 திகதி 6-12-66 திகதி வரைக்கும் நூற்றுக்கு 11 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 475-84 சதம் இதில் கோட்டுச் செலவு இறுபட்டது மேலும் ரூபா 42/-ம் முத்திரைச் செலவும்,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெருவிறை "நறுவிளியடி வளவும்; நறுவிலியடியும்" நிலப்பரப்பு பத்தும் (10-ம்) வீடும், போட்டிக்கோவும், குசினியும், கிணறும்; எல்லை கிழக்கு சிற்றம்பலம் இராசரத்தினத்தின் ஆதனம். வடக்கு - தெண்டாயுதபாணி கோவில் ஆதனமும், ரோட்டும். மேற்கு செல்லப்பா அருளம்பலத்தின் ஆதனம். தெற்கு செல்லப்பா கனகரத்தினத்தின் ஆதனம். இதடங்கலும், முற்பதிப்பு D- 257/268

தெல்லிப்பழை, 29-7-71

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer
எம் 179 13-8-71

---

## கோட்டு விறபனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ. இல. M. B 10306

வேலுப்பிள்ளை செல்லையாவின் கைம்பெண் நாகம்மா நல்லூர், யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1. தம்பையா சண்முகம் அவரது மனைவி
2. திரகாம்பிகை இருவரும் புளியங்கூடல்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 10306-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஹூ புரட்டாதி மீ 9-ம் உ (9-9-71) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 6000/- 20-9-1968 தொடக்கம் 10—5—69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 15 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 336-51 இதில் கழிவு ரூபா 150/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பற்றுப் பிரிவு ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை "கோட்டையடியாற் சலட்டு மேற்துண்டு" நிலப்பரப்பு 13¾ம இதில் கிழக்கு எல்லையுள் நிலப்பரப்பு 6¾ம் இத்துடன் கிணறும் வான் பயிர் வளர்பயிர்களும் எல்லை கிழக்கு முருகேசு மனைவி இராசம்மாவினதும் மற்றவர்களினதும் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வீரகத்தி முத்துகிருஷ்ணரதும் அவரது மனைவி சிதேவிப் பிள்ளையினதும் ஆதனம், தெற்கு தம்புவின் மனைவி சிவபாக்கியத்தின் ஆதனம், அதடங்கலும் பதிவு இல: C. 334/187

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 27-7-71, M 189.

க, சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்.
மதிப்பாளரும்
13—8—71

---

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

---

### பண்டிதர் இரத்தினேஸ்வர ஐயர் உதவி நிதி

பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. வே. நா. சிவபுண்ணியகுருநாதன், பண்டிதர் இரத்தினேஸ்வரஐயர் உதவி நிதிக்கு ரூபாய் பத்து (10/-) அனுப்பியுள்ளார். இப்பணம் ஆடி, ஆவணி, புரட்டாதி மாதத்திற்கு உரியதாகும்.

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ்ஆங்கிலப்பத்திரிகைகளின் சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப் பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 13—8—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்